நம்முடைய தேவை அதிகமாக இருப்பதால் ஏன் அதிகப்படியான உரத் தொழிற்சாலைகளை நாம் கேட்கக் கூடாது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அவர்கள் கேள்வி புரியவில்லை. ஆனால், மத்திய அரசாங்கத்திற்கு எத்தனை மனுக்கள் வந்தன என்று கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். அதுபற்றி நம்மிடத்திலே தகவல் இல்லை. நம்முடைய மாநிலத்திலிருந்து இந்தத் தொழிற்சாலையிலிருந்து ஒன்று, மெட்ராஸ் பெர்ட்டிலைசர்ஸ் ஒரு எக்ஸ்டென்ஷன் போட வேண்டுமென்ற ஒன்று, இரண்டுதான் மத்திய அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, தூத்துக்குடியிலே ஆரம்பிக்கப்பட்டிருக்கிற உரத் தொழிற்சாலை எப்பொழுது தன் புரடக்ஷனை ஆரம்பிக்கும்? அப்படி உரம் தயாரித்தால், அது இன்னும் மத்திய அரசாங்கத்தின் கண்காணிப்பில்தான் இருக்குமா? அல்லது மாநில அரசாங்கத்திற்கு ஏதாவது தனிச் சலுகை வழங்கப்பட இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நல்ல கேள்வி. உரத்தையெல்லாம் நாம் தயார் செய்கிறோம். ஆனால் உரத்தை விநியோகம் செய்கிற அதிகாரம், விலை நிர்ணயிக்கிற அதிகாரம், யாருக்கு அது கொடுக்கப்பட வேண்டுமென்று நிர்ணயிக்கின்ற அதிகாரம் அங்கேதான் இருக்கிறது. ஸ்பிக் நிறுவனம் திட்டமிட்ட ஒரு தொழிற்சாலையையும், மெட்ராஸ் பெர்ட்டிலைசர்ஸ் எக்ஸ்டென்ஷன் அமைக்கவும் அனுமதி கேட்டிருக்கிறோம். இரண்டும் கிடைக்குமானால், தமிழ்நாட்டினுடைய தேவையைவிட அதிகமாக உற்பத்தி செய்கின்ற ஒரு வாய்ப்பு இருக்கிறது.

திரு. அ. இராசமாணிக்கம்: இதுபோன்ற உரத்தொழிற்சாலை ஒன்று துறைமுகப் பகுதியான நாகையில்—அது பின்தங்கிய பகுதியாக இருப்பதால்—அங்கே துவக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நாகப்பட்டிணத்தில் துவக்குவதுபற்றித்தான் முதலில் பரிசீலனை செய்யப்பட்டது. அதைவிடக் கடலூர் மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று பிறகு முடிவு எடுத்திருக்கிறார்கள்.

1974 சனவரி 19]

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, கடலூரிலே திறக்க முயற்சி செய்து கொண்டிருக்கிற இந்த உரத் தொழிற்சாலை 'நாஃப்தா பேஸ்ட்' உரத் தொழிற்சாலைதானா? அப்படியானால், இந்த 'நாஃப்தா' விலை ஒவ்வொரு நாளும் ஏறிக்கொண்டே போகிறது. அதன் காரணமாக உரத்தின் விலை அதிகமாகிறது. ஆகவே, கால்சியம் வைத்து அம்மோனியா தயாரிக்கலாம் என்று சொல்கிறார்கள். அந்த முயற்சியை அரசு செய்ததா? அதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நாஃப்தா எளிதாகக் கிடைக்கும், விலை குறைவாக இருக்கும் என்ற கருத்து முன்பு இருந்தது. அதற்கு மாற்று, கோல் பேஸ்ட் இண்டஸ்ட்ரி தான். நாஃப்தா பேஸ்ட் இண்டஸ்ட்ரிக்குத்தான் கஷ்டப்பட்டு முன்பு அனுமதி வாங்கினோம். இப்பொழுது நாஃப்தா க்ருட் ஆயில் விலை ஏறுவதாலே, அது கிடைப்பது கஷ்டமாக இருக்கலாம். இந்த க்ருட் ஆயில் கொடுக்கக்கூடிய நாடுகள் எல்லாம், அதை அப்படியே விலைக்குக் கொடுக்காமல், அவர்களே, ஜாயின்ட் வென்சர், கூட்டுத் தொழிலே ஈடுபட்டு நடத்தலாம் என்ற அளவிலே, இரான் நாட்டோடு பேசும்போது, மத்திய அரசு அவ்வாறு முடிவெடுத்திருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அண்மையில் பேசும்போது இரான் நாட்டு உதவியோடு அப்படிப்பட்டத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட Naptha cracker Petro chemical complex, Refinery உரத்தொழிற்சாலை இவைகளெல்லாம் ஆரம்பிக்கப்பட நம்முடைய மாநில அரசும் சேர்ந்து ஒத்துழைத்து கூட்டுத் தொழிற்சாலை ஆரம்பிக்கத் தயாராக இருக்கிறது என்ற கருத்தை தெரிவித்து இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் வருமானால் நாஃப்தா பேஸ்ட் சிஸ்டம்தான் நல்லது.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, உரப் பற்றாக் குறையின் காரணமாக தொழு உரம் உற்பத்தி செய்வதற்கு கிராம மட்டங்களிலே திட்டங்களை அரசாங்கம் அமலாக்குவதற்கு ஏதாவது முயற்சிகள் செய்து கொண்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அண்மையிலே நடந்த தேசிய வளர்ச்சி மாநாட்டிலே எல்லா மாநில முதலமைச்சர்களும் உரப் பற்றாக்குறைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். நம்முடைய